# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் – 01.07.2026
**(காணொளி காட்சி விசாரணை)**

## முன்னிலை
**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 16038/A/2024**

திரு. N.சுப்பிரமணியம் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
தொழில்நுட்ப மேலாளர்,
மாவட்ட நில அளவை அலுவலகம்,
திருப்பூர் . -- பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் | திரு. N.சுப்பிரமணியம் அவர்கள் ஆஜராகவில்லை |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். அவரது வருகையின்மை பதிவு செய்யப்பட்டது. | |
| பொது அதிகார அமைப்பு | திருமதி.கா.சீதாலட்சுமி,<br>பொதுத் தகவல் அலுவலர்/ தொழில்நுட்ப மேலாளர், மாவட்ட நில அளவை அலுவலகம், திருப்பூர் அவர்கள் நேரில் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 09.08.2024 |
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், திருப்பூர் மாவட்டம், திருப்பூர் தெற்கு வட்டம், திருப்பூர் கிராமம். க.ச. எண் 271/4-ல் உள்ள, 1.39 ஏக்கர் விலம் எதை தேதி, நகர மறுநில அளவை செய்யப்பட்டது. இதன் தற்போதைய வார்டு பிளாக் பற்றிய தகவலயும், இதில் எத்தினை பிளாக் எண்கள் அமைந்துள்ளன என்ற தகவலையும், ஒவ்வொரு-பிளாக்கிலும் உள்ள நகர புல எண்கள் பற்றிய தகவலையும், மற்றும் நகர புல எண்கள் படி, உள்ள நிலங்களின் உரிமையாளர்கள் பெயர் பற்றிய தகவலையும் | |

| | |
|---|---|
| தனக்கு வழங்கக்கோரியுள்ளார். மேலும், 3 இனங்களில் தனக்கு தகவல்கள் வழங்கக்கோரி விண்ணப்பித்துள்ளார். | |
| சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் மனு மாற்றம் செய்த நாள் | ---- |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள் | ---- |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 20.09.2024 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள் | ---- |
| பிரிவு 19(3) இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 08.12.2024 |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் திருமதி.கா.சீதாலட்சுமி, பொதுத் தகவல் அலுவலர் / தொழில்நுட்ப மேலாளர், மாவட்ட நில அளவை அலுவலகம், திருப்பூர் அவர்கள், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு உரிய தகவல்கள் த.அ.உ.ச.32/2026/ஈ1, 25.06.2026-ன் வாயிலாக மேல்முறையீட்டு பொதுத்தகவல் அலுவலர்மற்றும் வட்ட துணை ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், திருப்பூர் தெற்கு அவர்களின் வாயிலாக மனுதாரருக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவித்து அதன் நகலை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

3. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் இன்றைய தின விசாரணைக்கு ஆஜராகி, தனது கருத்தை எடுத்துரைக்கத் தவறிய நிலையில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளது உறுதியாகிறது, எனவே, ***பொதுத்தகவல் அலுவலரால் அளிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இம்மேல்முறையீட்டு வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்பட்டு இவ்வாணையத்தால் ஆணையிடப்படுகிறது.***

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 16038/A/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தொழில்நுட்ப மேலாளர்,
மாவட்ட நில அளவை அலுவலகம்,
திருப்பூர்

**<u>மனுதாரர்</u>**

திரு. N.சுப்பிரமணியம்
1,நாச்சிமுத்துக்கவுண்டர் லே-அவுட்,
தாராபுரம் ரோடு,
KNP காலனி,
திருப்பூர் - 641 604.

Copy to file

KRM/PA 08.07.2026